**சுருக்கம்**

மாற்றுத் திறனாளிகள் நலன் – 12.12.2016 அன்று ஏற்பட்ட வர்தா புயல் சேதம் – பூவிருந்தவல்லி, பார்வையற்றோருக்கான அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி மற்றும் தாம்பரம் சானடோரியம், மனவளர்ச்சி குன்றியோருக்கான அரசு நிறுவனம் – சிறப்பு பழுது நீக்கப் பணிகள் மேற்கொள்ளுதல் – ரூ.17.70 இலட்சம் நிதி ஒப்பளிப்பு – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**மாற்றுத் திறனாளிகள் நலத் (மாதிந.1) துறை**

**அரசாணை (நிலை) எண்: 4**

**நாள்: 13.02.2018**
**ஹேவிளம்பி – மாசி, 1**
**திருவள்ளுவர் ஆண்டு, 2049**

**படிக்கப்பட்டது:**

மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கடித ந.க. எண் 6908/சிப–4/2016, நாள் 15.02.2017, 19.06.2017 மற்றும் 08.11.2017.

----------

**ஆணை:**

மேலே படிக்கப்பட்ட கடிதங்களில் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்கள் கடந்த 12.12.2016 அன்று தமிழ்நாட்டைத் தாக்கிய வர்தா புயலினால் மாற்றுத் திறனாளிகள் நலத் துறையின் கட்டுப்பாட்டில் இயங்கும் கீழ்க்கண்ட இரண்டு பள்ளிகளும் சேதம் அடைந்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்:–

| வ. எண் | பள்ளியின் பெயர் | சேத விவரம் |
|---|---|---|
| 1. | பார்வையற்றோருக்கான அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, பூவிருந்தவல்லி, சென்னை–56. | (அ) பள்ளியின் வடக்கு பகுதி சுற்றுச் சுவர் சுமார் 50 மீட்டர் அளவு இடிந்து விழுந்துவிட்டது.<br>(ஆ) 9, 10 மற்றும் 12ஆம் வகுப்புகள் நடைபெறும் 8 வகுப்பறைகளின் மேற்கூரைகள் பெயர்ந்து, இடிபட்ட நிலையில் உள்ளது. |
| 2. | மனவளர்ச்சி குன்றியோருக்கான அரசு நிறுவனம், தாம்பரம் சானடோரியம், தாம்பரம். | (அ) விடுதியின் முதல் மாடி படிக்கட்டுகள் சேதமடைந்துள்ளன.<br>(ஆ) நீர்தேக்கத் தொட்டி (Sintex Tank) நீர் ஏற்ற மின் மோட்டார் பழுதடைந்துள்ளது.<br>(இ) பள்ளி கலையரங்கம் (Auditorium) மற்றும் கழிவறைகள் சேதமடைந்துள்ளன.<br>(ஈ) விடுதியில் உள்ள உணவு உண்ணும் அறை (Dining Hall) சேதமடைந்துள்ளது. |

[த.பி.பா.]

2. மேற்காணும் பழுது நீக்கப் பணிகளுக்காக 2016–2017ஆம் ஆண்டிற்கான விலைவிகித அடிப்படையில் திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்ட பொதுப்பணித்துறையினைச் சார்ந்த செயற்பொறியாளர்கள் மற்றும் முதன்மைத் தலைமைப் பொறியாளர் (கட்டடங்கள்), தலைமைப் பொறியாளர் (கட்டடங்கள்), சென்னை மண்டலம் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப் பணித் துறை, சென்னை அவர்களின் ஒப்புதலுடன் கூடிய மொத்தம் ரூ.17,70,000/–க்கான திட்ட மதிப்பீடுகள் பெறப்பட்டுள்ளதாக மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் தெரிவித்துள்ளார்.

3. மேலும், 2017–2018ஆம் நிதியாண்டிற்கான வரவு–செலவு திட்டத்தில் ‘‘2059 – 01 – 053 DP 1814’’ என்ற கணக்குத் தலைப்பின் கீழ் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள தொகையான ரூ.40,00,000/–ல், பல்வேறு அலுவலகங்களுக்கு பராமரிப்பு செலவுகள் மேற்கொள்ள ரூ.35,18,000/– நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது போக, மீதம் ரூ.4,82,000/– மட்டுமே இருப்பில் உள்ளதாகவும், எனவே, இந்நிதி ஒதுக்கீட்டிற்குள் இந்நேர்விற்கென கோரப்பட்ட தொகை ரூ.17,70,000/– செலவினம் மேற்கொள்ள சாத்தியக் கூறுகள் ஏதும் இல்லை எனவும் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் தெரிவித்துள்ளார்.

4. ஆதலால், வர்தா புயலினால் பாதிக்கப்பட்ட பூவிருந்தவல்லி, பார்வைத்திறன் குறையுடையோருக்கான அரசு மேல்நிலைப் பள்ளி மற்றும் தாம்பரம் சானடோரியம் மனவளர்ச்சி குன்றியோருக்கான அரசு நிறுவனத்திற்கும் சிறப்பு அவசர பழுது நீக்கப் பணிகளை மேற்கொள்ள (Special Repairs) ரூ.17,70,000/– (ரூபாய் பதினேழு இலட்சத்து எழுபதாயிரம் மட்டும்) சிறப்பு ஒதுக்கீடாக இவ்வாண்டிற்கான (2017–2018) இறுதி திருத்திய மதிப்பீட்டில் (F.M.A.) ஒதுக்கீடு செய்யுமாறு மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அரசினைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

5. மேற்காணும் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவுடன் கூடிய திட்ட மதிப்பீடுகளை கவனமுடன் பரிசீலனை செய்த அரசு, அதனை ஏற்று, 12.12.2016 அன்று ஏற்பட்ட வர்தா புயல் காரணமாக சேதமடைந்த பூவிருந்தவல்லி பார்வையற்றோருக்கான அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி மற்றும் தாம்பரம் சானடோரியம், மனவளர்ச்சி குன்றியோருக்கான அரசு நிறுவனம் ஆகியவற்றில் பின்வரும் சிறப்பு பழுது நீக்கப் பணிகளை ரூ.17.70 இலட்சம் (ரூபாய் பதினேழு இலட்சத்து எழுபதாயிரம் மட்டும்) மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக மற்றும் நிதி ஒப்பளிப்பு வழங்கி ஆணையிடுகிறது:–

| வ. எண் | பள்ளியின் பெயர் | மேற்கொள்ளப்படவுள்ள பணி விவரம் | திட்ட மதிப்பீடு விவரம் |
|---|---|---|---|
| 1. | பார்வையற்றோருக்கான அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, பூவிருந்தவல்லி, சென்னை–56. | 9, 10 மற்றும் 12ஆம் வகுப்புகள் நடைபெறும் 8 வகுப்பறைகளுக்கு சிறப்பு பழுது நீக்கும் பணிகள் | ரூ.5,00,000/– |
| 2. | மனவளர்ச்சி குன்றியோருக்கான அரசு நிறுவனம், தாம்பரம் சானடோரியம், தாம்பரம் | Special Repairs to Toilet, Auditorium, Staircase, Head Room, PVC Water Tank, Dining Hall and Pipelines. | ரூ.12,70,000/– |
| மொத்தம் | | | ரூ.17,70,000/– |

6. மேலே பத்தி–5ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:–

> ‘‘2059 பொதுப் பணிகள் – 01 அலுவலகக் கட்டடங்கள்–053 பராமரித்தலும் செப்பனிடுதலும் – மாநிலச் செலவினங்கள் – DP கட்டடங்கள் – மாற்றுத் திறனாளிகள் நலப் பள்ளிகள் மற்றும் சேவை இல்லங்கள்–18 பராமரிப்பு – 01 குறித்த காலப் பராமரிப்பு’’
> [த.தொ.கு 2059–01–053–DP–1814]”

7. மேலே பத்தி 5ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள செலவிற்கான கூடுதல் நிதியொதுக்கம் ரூ.12,88,000/– 2017–2018ஆம் ஆண்டிற்கான இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும் எனினும் 2017–18ஆம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கையில் ஒரு குறிப்பிட்ட தொகையினை சேர்ப்பதன் மூலம் இச்செலவினம் சட்டப் பேரவையின் பார்வைக்கு கொண்டு செல்லப்பட வேண்டும். இந்நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி, மேலே பத்தி–5ல் அனுமதிக்கப்பட்ட தொகையினை பெற்று தலைமைப் பொறியாளர் (கட்டடங்கள்), பொதுப்பணித் துறை, சென்னை அவர்களுக்கு வழங்கிட மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மேலும், பத்தி–5ல் அனுமதிக்கப்பட்ட செலவினத்தை 2017–18ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கு உரிய வரைவு விளக்கக் குறிப்பினையும் மற்றும் இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு உரிய கருத்துருவையும் தவறாது நிதி (ச.ந.பொ–I) துறைக்கு அனுப்பி வைக்குமாறு மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

8. மேற்கண்ட பணிகள் முடிவடைந்த பின்னர் அதற்கான பணி முடிப்பு சான்றிதழினை (Work Completion Certificate) அரசுக்கு அனுப்பி வைக்குமாறு மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

9. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண் 4910/நிதி(சந)/2018, நாள் 12.02.2018 மற்றும் கூடுதல் நிதி ஒதுக்கப் பேரேடு எண் 2697 (இரண்டாயிரத்து அறுநூற்று தொன்னூற்று ஏழுல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

முகமது நசிமுத்தின்
அரசு முதன்மைச் செயலாளர் (மு.கூ.பொ.)

**பெறுநர்**

மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–5.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–35.
மாநில கணக்காயர், சென்னை–18.

**நகல்:**

மாண்புமிகு துணை முதலமைச்சரின் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு அமைச்சர் (சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டம்)
அலுவலகம், சென்னை–9.
முதன்மைச் செயலாளரின் முதன்மைத் தனிச் செயலர்,
மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, சென்னை–9.
நிதி (ச.ந./வ.செ.பொ.I&II)த் துறை, சென்னை–9.
பொதுப்பணி (ஜி1) துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்